**தெவினுவர பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மே 02 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 09 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 நவம்பர் 25 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தெவினுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையை வழுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் பெற வேண்டிய ரூபா 2,743,975 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான மிரிஸ்வத்த காணியில் பாதுகாப்பு வலை வேலி நிர்மானிப்பதற்கு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 923,363 செலவினம் மூலதனச் செலவினமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களை புணரமைக்கப்படுவதற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 200,500 செலவு மற்றும் சபையின் பாதுகாப்பு (கெமரா) தொகுதியை பொருத்துவதற்காக செலவு செய்த ரூபா 237,750 செலவினம் நிலையான சொத்தின் கீழ் மூலதனச் செலவினமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டில் சபைக்கு அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்றிருந்த டாக்டர் வண்டியின் கிரயம் ரூபா 392,000 வால் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள 10 கணக்கு விடயங்களில் மீதிகள் தொடர்பாக மற்றும் அவை தொடர்பான துணைப் பதிவேடு/பட்டோலைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிற்கு இடையில் கூட்டுத்தொகை ரூபா 36,181,235 வான வித்தியாசம் அவதானிக்கப்பட்டன.

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

2007 ஆண்டிட்கும் முன் இருந்து நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்படும் தொங்கல் கணக்கின் மீதியான ரூபா 821,995 வான செலவு மீதி தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

03 வருட காலத்தை மிகைத்து விஞ்சிவுள்ள ரூபா 78,168 நிலுவையான ஏணைய வருமான மீதியொன்றும், ரூபா 898,683 வான வேலைக் கடன்கொடுத்தோர் மீதியும், 2,130,684 வான நாநாவித கடன்கொடுத்தோர் மீதிகளும் ,ரூபா 731,068 வான செலுத்தப்படாத சம்பளம் மற்றும் படிகள் மீதியொன்றும் நிலவிய போதிலும், அம் மீதிகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மொத்தம் ரூபா 142,426,380 ஆன காணியும் கட்டிடமும் மற்றும் ஏனைய நிலையான சொத்துக்கள் தொடர்பாக முறையாக பராமரிக்கப்படும் நிலையான சொத்துப் பதிவேடு, இருப்புப் பதிவேடு, மற்றும் வருடாந்த பண்டகக் கணிப்பீட்டு அறிக்கையும், மொத்தம் 23,755,544 ஆன வாசிகசாலைப் புத்தகங்கள், வேலைக் கடன் படுனர் மீதி, மீண்டும் செலுத்த வேண்டிய வைப்புக்கள் மற்றும் நிலையான வைப்புக்கள் தொடர்பில் பட்டோலையும், ரூபா 5,413,454 ஆன வேலைக் கடன்கொடுனர் மீதி மற்றும் ரூபா 1,852,089 பொதுவான கடன்படுனர் மீதி தொடர்பாக பட்டோலை மற்றும் துணைப் பதிவேடு, ரூபா 825,551 ஆன முற்கொடுப்பணவு தொடர்பான பட்டோலை மற்றும் வைப்புப் பதிவேடு போன்றவைகளுக்கு சான்றுகள் முன்வைக்கப்படாததனால் கணக்காய்வின் போது அவைகளை திருப்திகரமாக பரிசீலனை செய்ய முடியாமல் இருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 19,474,448 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவுகள் விஞ்சிய வருமானம் ரூபா 15,479,190 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,995,258 ஆன வளர்ச்சி காட்டப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவீனம் மொத்த மீண்டுவரும் வருமானத்தின் 73 வீத அளவு உயர் பெறுமானத்தை பெற்றிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுக்குள் வருமான உதவி, சுய சம்பாதிப்பு வருமானம் மற்றும் மீண்டுவரும் செலவு தொடர்பான சுருக்கமான விபரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வருடம் | மொத்த மீண்டு வரும் வருமானம் | வருமான உதவி | சுய சம்பாதிப்பு வருமானம் | மொத்த மீண்டு வரும் செலவு | சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மீண்டு வரும் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 73,421,269 | 30,683,938 | 42,737,331 | 53,946,821 | (11,209,490) |
| 2014 | 58,564,900 | 18,166,192 | 40,398,708 | 43,085,710 | (2,687,002) |
| 2013 | 56,978,572 | 14,708,690 | 42,269,882 | 38,716,993 | 3,552,889 |

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுக்குள் வருமான உதவிகளில் கணிசமான வளர்ச்சியொன்று காட்டப்படுவதுடன், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் சுய சம்பாதிப்பு வருமானத்திலும் சிறு வளர்ச்சியொன்று காட்டப்பட்டது.

(ஆ) ஒவ்வொரு வருடத்திலும் மீண்டுவரும் செலவு தொடர்ந்து அதிகரிக்கும் வேகத்தில் வளர்ச்சி அடைந்து இருந்த போதிலும் அந் நிலமையை கட்டுப்படுத்துவதன் மீது சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் சுய சம்பாதிப்பு வருமானத்திற்கு மேலாக ஒவ்வொரு ஆண்டும் மீண்டுவரும் செலவினம் அதிகரித்திருந்ததுடன், வருமான உதவி கிடைக்கப்பெறாவிடின் சுய சம்பாதிப்பு வருமானத்தினால் எவ்விதத்திலும் மீண்டுவரும் செலவினத்தை மீள் நிரப்பிகொள்முடியாத நிலைமை காட்டப்படுகிறது.

(ஈ) மேல் குறிப்பிடப்பட்ட இலக்கம் (அ) தொடக்கம் (இ) வரையான பந்திகளில் குறிப்பிடப்படும் விடயங்களின் பிரகாரம் வருமான நிலைமையை உயர்துவதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும், அதற்காக முறையான வேலைதிட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட வேண்டும் எனவும் அவ்வாறு செய்யப்படாத போது சபையின் நிதி நிலைமை தொடர்பில் சிக்கலான நிலைமை உருவாக கூடும் எனவும் அதன் ஊடாக நிலைத்திருப்பது தொடர்பில் பாதகமான தாக்கம் ஏற்பட முடியும் எனவும் அவதானிக்கப்பட்டன.

## 2.4 வருமான நிருவாகம்

### 2.4.1 வீத வரி

மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவை மீதி மற்றும் ஆண்டிற்கான பற்றுச்சீட்டிடலோடு ரூபா 5,154,841 அறவிடப்படவேண்டிருந்ததுடன் நிலுவை மீதிகளின் 16 சதவீதமும் பற்றுச்சீட்டிடலின் 37 சதவீதமும் அறவிடப்பட்டிருந்தது. நிலுவை மீதி அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 ஏக்கர் வரி

ஆரம்ப நிலுவை ஏக்கர் வரி மீதி மற்றும் ஆண்டிற்கான பற்றுச்சீட்டிடலோடு அறவிட வேண்டிய ரூபா 64,398 ஆல் ஆண்டினுள் ரூபா 1,970 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன், நிலுவை மீதி அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 வாடகை

ஆரம்ப நிலுவை மீதியில் 21 வீதம் மற்றும் பற்றுச்சீட்டிடலினால் 50 வீதம் மாத்திரம் ஆண்டின் போது அறவிடப்பட்டதனால் வருட இறுதியில் நிலுவை மீதி ரூபா 9,758,631 அளவான உயர் பெறுமானத்தை பெற்றிருந்தது. நிலுவை தொகையை அறவிட முறையான செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

### 2.4.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 திசெம்பர் 31 திகதியில் நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 722,579 வும் முத்திரைக் கட்டணம் தொடர்பில் ரூபா 18,375,079 பெறவேண்டியதாக இருந்தது.

**2.4.5 ஏணைய வருமானம்**

2014 ஆண்டின் போது ஜெ.சீ.பீ இயந்திரத்தை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா 281,757 வான பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

**3.1 மூலதன வேலை முன்மொழிவுகளை செயற்படத்துவதன் வளர்ச்சி**

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட மூலதன செலவு ரூபா 568,669,000 ஆன போதும், உள்ளவாறான மூலதனச் செலவு ரூபா 57,502,916 ஆனதில் ரூபா 511,166,084 சேமிப்பு காணப்பட்டது. மீதி மதிப்பிடப்பட்ட ஏற்பாட்டின் 90 வீதமாகும் இதன் பிரகாரம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடு அதன் நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளமை பின்தங்கிய நிலைமையை காட்டுகின்றது.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை பதவி வகைகளில் மேலதிக பதவியணியினரின் என்ணிக்கை 09 ஆக இருந்ததுடன், அப் பதவிகளை முறையாக்கிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆண்டு முதல் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 59,933 வான கடன் மீதியை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு திறமையின்மை**

15 அலுவலர்கள் சார்பாக உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து மீள் நிரப்பிக்கொள்ள வேண்டிய ரூபா 1,011,498 ஆன ஆதனக் கடன் தொடர்பான வங்கி வட்டியின் வித்தியாசத்தை மீளாய்வாண்டு இறுதி வரை மீள்நிரப்பப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டில் பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள 04 செலவின விடயங்களின் எல்லை விஞ்சிய ரூபா 7,037,643 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், 04 செலவின விடயங்களின் கூட்டுமொத்த ரூபா 10,267,665 சேமிப்பு ஆனது. 04 வருமான விடயங்களின் அடையப்பெறாத எதிர்ப்பார்கப்பட்ட வருமானம் ரூபா 7,274,622 ஆனமை போன்ற காரணங்களினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப்பிரமானங்கள் 133 மற்றும் 134 ல் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் மற்றும் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய இலக்க தபபா/யஹ/01/ந.ச.லே கொண்ட தெற்கு உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றிக்கை பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று செய்யப்பட்டிருக்காத போதிலும், சபையினால் நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு அலுவலருக்கு மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் கொடுப்பணவாக ரூபா 499,752 செலுத்தப்பட்டிருந்தது.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமை குழு**

2009 யூன் 09 திகதிய இலக்க DMA/2009(i) கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிருவப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

கிரயம் ரூபா 1,369,760 ஆன செயலிழந்த 03 வண்டிகள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 02 கப் வண்டிகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதி வரையிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

சபை மூலம் பாவனையில் ஈடுபடுத்தியிருந்த மொத்த பெறுமானம் ரூபா 45,945,129 ஆன 05 வண்டிகள் சுவீகரிக்கப்படாது பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு.

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு.

(இ) வருமான நிருவாகம்.

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்.